**தலவாக்கலை லிந்துல நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலவாக்கலை லிந்துல நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானச் செலவினக் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலவாக்கலை லிந்துல நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (l) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6.1(அ) ஆம் பந்தியின் அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக் காண்பித்த ரூபா 1,775,979 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் கணக்கில் சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிறுவகத்திற்கு அடுத்த ஆண்டிற்காக செலுத்த வேண்டிய கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 1,001,389 தொகையை நடைமுறைப் பொறுப்பாக கணக்கீடு செய்யாமல் நீண்ட காலப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில சுட்டிக் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் கடன் தவணைகளின் பெறுமதி குறுங்காலப் பொறுப்பாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன் முலதனம் நீண்ட கால மற்றும் குறுங்காலம் என வெவ்வேறாக இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | பொருட் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 10 பித்தளை மற்றும் வெண்கல விழாப் | கணக்காய்வில் 2022 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்து கணக்காய்வுக்கு | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு |

| | | |
|---|---|---|
| பொருட்கள் விடயங்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | உட்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) நிதிக்கூற்றுக்களில் ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா. 98,700 ஆன சொத்துக்கள் கூடுதலாக காண்பிக்கப்பட்டும் ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா. 240,700 ஆன சொத்துக்கள் குறைத்தும் காணப்பட்டது. | அடுத்த நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மீளாய்வாண்டின் இறுதியில் 08 கணக்கு மீதிகளுக்குரிய 11 விடயங்களின் பிரகாரம் பெறுமதி குறித்த பயன்பாட்டு பதிவேடுகளுடன் இணக்கம் செய்த போது அட்டவணைகள் அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 4,348,328 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | 2022 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கணக்கு மீதிகளில் வேறுபாடு தொடர்பாக ஆராய்ந்து பார்த்து குறித்த அட்டவணை கள் அல்லது நிதிக் கூற்றுக்கள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,868,241 கூட்டு மொத்தமான 11 கணக்கு மீதிகளுக்குரிய கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்வதாகவும் குறித்த சீராக்கங்களை மேற்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்காக தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,578,700 ஆக இருந்துடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,982,550 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | அரச நிறுவனம் 01 இடமிருந்து தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்தும் வீட்டு அலகுகளிலிருந்தும் 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான ரூபா 1,171,510 ஆன நிலுவை வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேல் கொத்மலை நீர்த்தேக்க நிர்மாணத்தின் போதும் எல்லை நிர்ணயத்தின் போது ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 818,362 ஐ பதிவழிப்பதற்காக கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்திநற்கு அனுப்பு வதற்கு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **ஏனைய வருமானம்** | | |
| i | 2017 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்த அறவிடப்பட வேண்டிய ரூபா. 100,396 ஆன கடை வாடகை, 5 ஆண்டுகள் முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா. 95,804 ஆன காணிக் குத்தகை மற்றும் 08 ஆண்டுகளாக அறவிடப்பட வேண்டிய ரூபா. 203,492 ஆன வீட்டு வாடகை மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. காணி குத்தகை தொடர்பான உரிய நபர் இது வரை இனங்காணப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | பணக் கொடுப்பனவைத் தவிர்ப்புச் செய்கின்ற கடைகளை நகர சபைக்கு கையேற்க 2022 ஜுலை 24 ஆம் திகதி சபை அங்கீகாரம் கிடைத்துள்ள தாகவும் வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டிய உத்தியோகத்தர் சேவை புரியும் நிறுவனத்திற்கு சம்பளத்திலிருந்து அறவிட்டு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் காணி வரி தொடர்பாக நபர்களை இதுவரை இனங்காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| ii. | சபை மீளாய்வாண்டுக்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விளம்பர அறிவித்தல் பதாதைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா. 485,650 ஆன கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | விளம்பர பதாதைக் கட்டணங்களை அறவிடுவது தொடர்பான கடை உரிமையாளர்கள் தெரியப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2002 முதல் 2021 மே வரையான காலப்பகுதிக்குள் சபைக்குக் கிடைத்து மறுக்கப்பட்ட ரூபா 607,345 ஆன 08 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 இன் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 349,794 ஆன 4 காசோலைகள் தொடர்பாக வழக்கு தொடரப்பட்டு ரூபா. 11700 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 157,551 ஆன 3 காசோலைகளின் கட்டணங்களை அறவிடுவதற்காக 03 பொலிஸ் முறைப்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வும் ரூபா. 100,000 தொகையை அறவிடுவதற்காக வழக்கு தொடரப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2003 ஆம் ஆண்டு முதல் 2019 வரையே 01 வருடம் முதல் 18 ஆண்டு காலம் வரை 11 நிர்மாணங்களுக்குரிய வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் இருந்து பெற வேண்டிய மீதி ரூபா 6,908,217 ஆக இருந்ததுடன் 13 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய மீதி ரூபா 5,324,174 தொகையை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரர் மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுபக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 03 ஆண்டுகள் வரை தலவாக்கல தர்மலிங்கம் மண்டபத்திற்கு அண்மையில் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக நிர்மாணிக்கப் பட்ட சம்பத் பியஸ சிற்றுண்டிச்சாலை ஒன்றாக நடாத்திச் செல்வதற்கு வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த குத்தகையாளரால் முறையற்ற விதத்தில் | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த கட்டிடத்தை நகர சபைக்கு கையளிக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செய்யாவிட்டால் | சபையின் சொத்துக்கள் ஆக்கபூர்வமாக முகாமை செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெற்றுக் கொள்ளப்பட்ட நீர் மற்றும் மின்சார வழங்கலுக்காக ரூபா 79,940 ஆன மின் கட்டணங்களும் ரூபா 137,831 ஆன நீர் கட்டணங்களும் செலுத்தப்படாதிருந்ததுடன் தங்குமிடமொன்றாகவும் நிறுவனத்தை பயன்படுத்தப்பட்டிருந்தது. | சபைக்கு பொறுப்பேற்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) 2021 ஆம் ஆண்டிற்காக வாடி வீட்டை குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்வி கோரி சபை அங்கீகாரமின்றி தலைவரின் தனிப்பட்ட விருப்பின் பிரகாரம் 10 ஆண்டுகளுக்கு குத்தகை உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. ரூபா 2,016,000 ஆன வருடாந்த குத்தகை வாடகைக்கு தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப் பட்டதன் பின்னர் ரூபா 1,499,212 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே தலவாக்கலை வாடி விடுதி ஓராண்டுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கையில் குத்தகையாளரால் சபை அங்கீகார மின்றி வாடி வீட்டு வளவில் 3000 சதுரஅடி அளவிலான நிரந்தர கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | கேள்விதாரரின் வேண்டுகோளின் பிரகாரம் வாடி வீடு 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதாகவும் வாடி வீட்டு கட்டிடத்திற்கு சேதம் ஒன்று ஏற்படாத வகையில் அத் தற்காலிக நிர்மாணத்திற்காக முன்னால் கௌரவத் தலைவரால் தனிப்பட்ட அங்கீகாரத்தை வழங்கியிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு சாதகமான வகையில் செயற்பட வேண்டும். |

### 3.3. சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 திசெம்பர் 30 ஆம் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தியின் பிரகாரம் குறித்த நிறுவனத்திற்குச் சொந்தமான சரியான உரித்துக் காணப்படும் காணிகளில் மாத்திரம் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் ரூபா 3,921,727 ஆன தொகையை செலவு செய்து நிர்மாணிக்கபட்ட மிடல்டன் சுற்றுலா விடுதி மற்றும் மிடல்டன் உணவு விற்பனை நிலையம் நிர்மாணிக்கப்பட்டு இருந்த காணிகளின் சட்ட ரீதியான உரித்து சபையிடம் காணப்படவில்லை. | 2013 ஒக்டோபர் 14 ஆம் திகதி நடைபெற்ற பொதுச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டதாகவும் காணி கையேற்றல் தொடர்பாக தற்போதைய உரித்து காணப்படும் தலவாக்கல தோட்டத்திடமிருந்து எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | காணிகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | லிந்துல கடைத்தொகுதியில் தனிமாடி கடையாக நிர்மாணிக்கப்பட்டு சபையினால் உடன்படிக்கைகளின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த கடைகள் குத்தகையாளரால் இரண்டு மாடி மூன்று மாடி மற்றும் நான்கு மாடிகளாக சபையின் அங்கீகார மின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கடைகளை மாடிகளாக நிர்மாணிப்பதற்கு 2002 முதல் 2005 வரையான காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த போதும் சபையுடன் கடை உரிமையாளர்கள் 2015 ஆம் ஆண்டின் போதே உடன்படிக்கை செய்திருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமினறி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |